DR. H. V. HANDE: I just wanted to say that we are opposing it.

(உறுப்பினர்கள் எழுந்து நிற்க, எண்ணிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் 93 பேர்; தீர்மானத்தை எதிர்ப்போர் 3 பேர்; நடுநிலை வகிப்போர் ஒருவருமில்லை. ஆகவே, தீர்மானம் நிறைவேறியது.

(அரசினர் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.)

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

[தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1971]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு என் 36/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I want to make a statement. To-day morning only at about 8 o' clock we got the Bill. We have got no time to study the Bill. Some more time may be given. This is an important piece of legislation. It cannot be hustled through. I once again request the Hon. Minister to give us some time.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அடுத்த மசோதாவையும் முன்மொழிந்து விடுகிறேன். இரண்டு மசோதாக்களின் பேரிலும் நாளை விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரியல்ல. இந்த மசோதாவை நிறைவேற்றிய பிறகுதான் அடுத்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளமுடியும்

You cannot move both simultaneously. It may not be in order to do so now.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.